REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: சித்திரை 19உ திங்கள் (2—5—55) ★ ★ வெளியூர்: சித்திரை 20உ செவ்வாய் (3—5—55) [இதழ் 274

அங்குதான் ஆப்ரகாம் லிங்கன் தோன்றினர்!

அமெரிக்காவிலுள்ள பால்டிமோர் நகரில் ஒரு திரைப்படக் காட்சித் தியேட்டரில் கருப்பு நீக்ரோவர் அனுமதிக்கப்படாததை ஆட்சேபித்து சுமார் 150 பேர் அமைதியான முறையில் 'சத்தியாக்கிரகம்' மேற்கொண்டனராம்.

மேற்படி 'சத்தியாக்கிரகத்தை' மேற்கொண்டவர்களில் பெரும்பாலானோர் நீக்ரோவர்தான் என்று கூறப்படுகிறது.

நிலைமையைச் சமாளிக்கப் போலீசார் அனுப்பப்பட்டனராம். யாரும் இது சம்பந்தமாகக் கைது செய்யப்படவில்லை.

'காசு இல்லை; உள்ளத்தில் மாசு இல்லை'

'மிட்டா, மிராசுகளற்ற பாட்டாளிகள் கூடாரமே தி. மு. கழகம்'

'உழைப்புக்கே உலகம் உரிமையாக வேண்டும்'

சிதறிக்கிடக்கும் திராவிடப் பாட்டாளிகளுக்கு ஒன்றுசேர அழைப்பு

சென்னை மே தின விழாப் பொதுக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் முழக்கம்

சென்னை, ஏப். 1—

"துருப் பிடித்த இரும்புத் துண்டுகள் சாலையில் கேட்பாரற்றுக் கிடப்பதுபோல், திராவிடத்தில், தொழிலாளிகள், சிதறிக் கிடக்கிறார்கள்; அவர்களுக்கு, தங்கள் உழைப்பைப் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணம் ஏற்படவே இல்லை; ஏனென்றால், 'உழைப்பதே கேவலம்', என்ற கருத்து நமது நாட்டில் நிலவுகிறது. நாடெங்கும் சிதறிக் கிடக்கும் தொழிலாளர்களை ஒன்று திரட்டவும், அவர்களுடைய உழைப்புக்குத் தக்க ஊதியம் அளிக்கவும், நாட்டிலே உள்ள அரசாங்கம் முனைய வேண்டும்; நமது நாட்டில் தற்போது அப்படிப்பட்ட அரசியல் அமைப்பு இல்லை."

"இன்று நாம், மே தினம் கொண்டாடுகிறோம்; தி. மு. கழகத்தில் உள்ளவர்கள் தொழிலாளர்கள்தான்; அதில் சீமான்களோ பூமான்களோ கிடையாது; சாதாரணமாக, அன்றாடம் வாழ்க்கைக்குப் பாடுபட வேண்டியவர்களே அதிகம் இருக்கிறார்கள்; பாட்டாளிகள் கூடாரமாகிய நாம், 'மே நாள்' கொண்டாடுகிறோம்; தி. மு. கழகத்தில் மிட்டா மிராசுகள் கிடையாது; தி. மு. கழகம், பாட்டாளிகளின் 'இதய நாடி'களைத் தொட்டு, நெஞ்சைத் தடவுகிறது என்பதற்கு இங்கே பல்லாயிரக்கணக்கில் அமர்ந்திருக்கும் நீங்களே சாட்சியாவீர்கள்; நம்மிடத்திலே காசு இல்லை—உண்மைதான்; ஆனால், நமது உள்ளத்திலே மாசு இல்லை; அப்படிப்பட்ட நாம்தான், பெரும் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டிருக்கிறோம்; திராவிட நாட்டு மக்களின் வாழ்வு உயர வழி என்னவென்று ஆராய்ந்து கூறுகிறோம்,"

—இவ்வாறு, திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மே தின விழாவையொட்டி, சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில், பல்லாயிரக்கணக்கில் குழுமியிருந்த மக்களிடையே முழக்கமிட்டார்.

தொடர்ந்து பொதுச் செயலாளர் அவர்கள் பேசியதாவது :—

"எனக்கு முன்பு பேசிய தோழர்கள் குறிப்பிட்டார்கள்—'தி. மு. கழகத்தை மாற்றார் ஏசிப் பேசுகிறார்கள்; இழித்துரைக்கிறார்கள்'—என்று! அவர்கள் அப்படித்தான் பேசுவார்கள். மாற்றார்கள் நமக்கு மதிப்புரை தருவார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா? அவர்கள்தான் மாற்றார்களாயிற்றே! நாம் அவர்கள் கூறும் முடிவுகளை எதிர்பார்க்கவில்லை; வாதி, பிரதிவாதியிடமா நியாயம் கோர முடியும்?

"நாம் புதிய பல போராட்டங்களை நடத்தினோம்; புதிய பொறுப்புகளை ஏற்றுக்கொண்டோம்; நம்முடைய பணியின் மதிப்பு என்னவென்று பொதுமக்களாகிய நீதிபதிகளிடம் கேட்கிறோம். இடையில் நாம் பெற்றுள்ள வளர்ச்சி என்ன என்றுதான் நாம் கணக்குப் போட்டுப் பார்க்க வேண்டும்.

"மக்கள் மன்றம் என்ன சொல்கிறது? பொது மக்கள் நமது சாதனைகள் பற்றி என்ன சொல்கிறார்கள்? '1942-ல் மே தினம் கொண்டாடினோம்; 1955-லும் மே தின விழா கொண்டாடுகிறோம்.

"நமது வளர்ச்சி அதிகமாகியுள்ளதா? குறைந்து போயுள்ளதா? நமது கருத்துக்களை மக்கள் மன்றம் ஏற்றுக் கொண்டதா, இல்லையா?—அந்தக் கணக்கைத்தான் நாம் பார்க்க வேண்டும்; எனவே மாற்றார்களின் இழித்துக் கூறுதல், இல்லாது பொல்லாது புனைந்து கூறுதல் ஆகியவற்றையெல்லாம் 'குப்பை'களென ஒதுக்கித் தள்ளுங்கள்; 'குப்பைகள்' என்று ஒதுக்கும் அவைகளை தூர எறிந்து விடாதீர்கள்; எங்காவது ஓர் இடத்தில் அவைகளைப் போட்டு வையுங்கள்; வளரும் திராவிட முன்னேற்றக் கழகப் பயிருக்கு அந்தக் குப்பைகள் எருவாக இருக்கட்டும்!

ஆகவே, நமது வளர்ச்சி மக்கள் மன்றத்திலே எப்படி இருக்கிறது? மாணவர்களிடையே எப்படி இருக்கிறது?—என்று நாம் பார்க்கவேண்டும். அத்துடன், அண்ணா அவர்கள் கூறுவதுபோல், நமக்கு, 'எதையும் தாங்கும் இதயம்' வேண்டும்; மாற்றாரின் இழிச் சொற்களைப் பொருட்படுத்தாமல், அத்தனைக்கும் ஒரு புன்சிரிப்பு காட்டி, அண்ணா அவர்கள் நம்மிடையே அடிக்கடி சொல்வதுபோல், 'கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு' ஆகியவற்றுடன் தி. மு. கழகத் தோழர்கள் பணியாற்றவேண்

(4-ம் பக்கம் பார்க்க)

களம் புகுவோம்-உரிமை பெறுவோம்!

நாடு பெற்று நல்வாழ்வு பெற உறுதி

திராவிடப் பாட்டாளிகள் அணிவகுத்த காட்சி

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியனுக்கு சென்னை தந்த மகத்தான வரவேற்பு

திருவல்லிக்கேணி கடற்கரையில் ஒரு லட்சம் திராவிடர் திரண்டனர்

சென்னை, ஏப். 2—

அடிமை வாழ்வை ஒழிக்க பாரிஸ் நகரில் தனிப் புரட்சிப் படை கிளம்பியதுபோல், முதலாளித்துவத்தின் கொடுமையை ஒழிக்க சிகாகோ நகரில் பாட்டாளிகள் கூடியதுபோல், நேற்று, சென்னையில் திராவிடப் பாட்டாளி மக்கள் கூடி, மே விழா கொண்டாடினர்.

சென்னை 42-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கள் முயற்சியினால், சென்னை மாவட்ட தி. மு. கழகத்தினர் திருவல்லிக்கேணி கடற்கரையில் மே திருநாளைக் கொண்டாடி, திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியனுக்கு வரவேற்பளித்தனர்.

கடற்கரையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டமும், கான்ரான்ஸ்மித் நகரில் துவங்கி சென்னையின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்ற ஊர்வலமும், 'திராவிடத் தொழிலாளர்களே, ஒன்றுபடுவீர்!' என்ற முழக்கத்திற்கு சென்னையில் எவ்வளவு மகத்தான ஆதரவு கிடைக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதுபோல் இருந்தது.

வடநாடு உயர் வாழ்வு வாழும் நிலை—தென்னாடு தேய்ந்து கொண்டே போகும் நிலை—எத்தர்களும், ஏமாற்றுக்காரர்களும் திராவிடர்களைச் சுரண்டும் போக்கு—சனாதனிகள், சாத்திரத்தின் துணை கொண்டு நம்மவர் உழைப்பை உறிஞ்சிக் கொழுக்கும் நிலை—இவை அனைத்தையும் தெளிவுற விளக்கித் தீட்டப்பட்ட பல ஓவியங்கள்; தி. மு. கழகக் கிளைகளின் பெயர் பொறித்த கொடிகள்; 'திராவிடத் தொழிலாளர்களே, ஒன்றுபடுவோம்! சமதர்மம் ஓங்குக! திராவிட நாடு திராவிடருக்கே!'—என்ற வாக்கியங்கள் எழுதப்பட்ட அட்டைகள்—இவற்றையெல்லாம் ஏந்தி, பல்லாயிரக்கணக்கான மக்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த மாபெரும் ஊர்வலத்தை, புதுமை நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் தலைமை தாங்கி நடத்திச் சென்றார். வீதிகளின் இருமருங்கிலும் ஏராளமான மக்கள் கூடி நின்று, ஊர்வலத்தில் சென்ற தோழர்களை உற்சாகப்படுத்தினர்.

ஊர்வலத்தினர் மிகவும் அமைதியுடன், தொழிலாளர் வாழ்வு பற்றிய முழக்கங்களையும், திராவிட நாடு பிரிவினை பற்றிய முழக்கங்களையும் முழங்கியவண்ணம் சென்றனர்.

ஊர்வலத்தை, சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இளம்பரிதி, முன்னாள் நகரசபை உறுப்பினர் முனுசாமி, மதியண்ணன், இராவணன் ஆகியோர் ஒழுங்குடன் நடத்திச் சென்றனர்.

'வடநாட்டு ஏகாதிபத்தியம் ஒழிக; திராவிடத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்; திராவிட நாடு திராவிடருக்கே!'—என்ற முழக்கங்களுடன் ஊர்வலம் கடற்கரையை அடைந்தது.

(4-ம் பக்கம் பார்க்க)

மேதினியெங்கும் மே விழா

★

செஞ்சீனாவில்!

ஹாங்காங், மே 1—

பீகிங்கில், இன்று, மே தின விழா அதிசிறப்பாக நடைபெற்றது. 10 இலட்சம் மக்கள் கலந்து கொண்ட பிரம்மாண்டமான மே தின அணிவகுப்பு நடைபெற்றிருக்கிறது.

★

செஞ்சதுக்கத்தில்!

பொதுவுடைமைப் பூங்காவான ரஷ்யாவின் தலைநகரான மாஸ்கோவில், புகழ்மிக்க செஞ்சதுக்கத்தில், இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் மே தின விழா பல்லாயிரக்கணக்கான மக்கள் களிப்பேருவகையுடன் கொண்டாடப் பெற்றிருக்கிறது.

'க்ரெம்லின்' மாளிகையிலிருந்து மணி ஓசை ஒலிக்க தற்காப்பு மந்திரியான ஜூகோவ், செஞ்சேனை அணிவகுப்பினைப் பார்வையிட்டு மரியாதை பெற்றிருக்கிறார்.

அரசாங்க, கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களும் பங்கு பெற்றிருக்கின்றனர்.

செஞ்சேனை தந்த மரியாதைக்குப் பதிலளித்துப் பேசுகையில், மார்ஷல் ஜூகோவ், 'ஏகாதிபத்தியம், காலனி ஆதிக்கம் இவற்றிற்கு எதிராக, உலகத் தொழிலாளர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து போராட வேண்டும்,' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

★

பிரம்மாண்டமான பீரங்கிகள்

அணுகுண்டு வெடிப்பவையா?

மாஸ்கோ, மே 1—

மே தின விழாவையொட்டி இன்று மாஸ்கோவில் நடைபெற்ற இராணுவ அணிவகுப்பு ஒன்றின் போது, நான்கு மிகப் பெரிய பிரம்மாண்டமான புதிய ரக பீரங்கிகள் வைக்கப்பட்டிருந்தனவாம். இத்தகைய மிகப் பெரிய பீரங்கிகள் காட்டப்படுவது இதுவே முதல் தடவை என்று கூறப்படுகிறது.

இவைகள் பெரிய வண்டி ஒன்றில் வைத்து இழுத்துச் செல்லப்படுகையில் இடிமுழக்கம்போல் சத்தம் கேட்டதாம். இவ்வளவு பெரிய பீரங்கிகளை இதுவரை யாரும் பார்த்திருக்க முடியாது என்று கூறப்படுகிறதாம்.

★

சேலத்தில்

சேலம் செவ்வாய்ப்பேட்டை தி. மு. கழகக் கிளையின் சார்பில், விக்டோரியா மார்க்கெட் மைதா

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 2—5—'55 திங்கள்

புகைகிறது....!

விஞ்ஞானத்தின் தீங்கனி இயந்திரம்!—மனிதன் உழைக்கும் ஆற்றலைக் கூட்டி, உழைப்பைக் குறைத்து உற்பத்தியைப் பெருக்கும் பேராற்றல் இயந்திரத்தின் உள்ளடக்கம்.

குறிப்பிட்ட ஒரு துறையில் முதல் முதலாக உருவாக்கப்பட்ட இயந்திரத்திற்கும், கால வளர்ச்சியில் அடுத்து அடுத்து முன்னிலும் சிறப்புடையதாக அமைக்கப்பட்டுவரும் இயந்திரத்திற்கும் உள்ள வேற்றுமை, கற்கால மனிதனுக்ும், தற்கால மனிதனுக்கும் உடை - நடை - நொடி - பாவனைகளில் காணப்படும் வேற்றுமையையும் மிஞ்சி நிற்பதாகும்.

குறிப்பிட்ட துறையில் மேற்கொள்ளப்பட்ட இயந்திரத்தை மேலும் மேலும் ஆற்றலுள்ளதாக மாற்றி அமைத்திடும் பணிக்கு முடிவு கிடையாது—ஏற்படவும் முடியாது. ஒவ்வொரு துறையிலும் பயன்படுத்தப்பட்டு வரும் இயந்திர அமைப்புகள், முன்னிலும் ஆற்றலுள்ளதாகப் புதுப்பிக்கப்பட்டேதான் வரும். இந்த உண்மையைத்தான் நாம் அனுபவ வாயிலாக அறிந்து வருகிறோம்.

மனிதனுடைய உழைப்பைக் குறைத்து, குறைந்த உழைப்பால் உற்பத்தியைக் குவித்திடவும், அதுகொண்டு தங்கள் நலன்களைப் பூர்த்தி செய்து இன்ப வாழ்வு துய்க்கவும், முதல் முதலாக மனிதனின் நல்லறிவாலும் நல்லெண்ணத்தாலும் உருவாக்கப்பட்ட இயந்திர சாதனங்கள், கட்டுக்கடங்காத நலம் பலவற்றை மனித குலத்துக்குப் புரிந்த அளவுடன் மட்டுமே நின்றுவிடவில்லை. வழங்கிய நலன் அளவிற்குக் கேடுகளையும் அவைகள் தந்துள்ளன. இப்படி வாதிடுகின்றனர் இயந்திர நாகரிக வைரிகள்.

அவ்வாறு கூறுவோரில் நல்லவர்களும் உண்டு; புல்லர்களும் உண்டு; எத்தர்களும் உண்டு; சுத்த அறிவிலிகளும் உண்டு.

மனித குலத்தின் மீது தங்களுக்குள்ள நல்லெண்ணத்தின் காரணமாக, மேற்குறித்துள்ளவாறு கூறுவதாக இருந்தாலும், மக்கள் அறியாதிருக்க உண்மை நிலையை மறைக்கக் கருதி அவ்வாறு உரைப்பதாக இருந்தாலும், இரு சாராரின் கூற்றும் யானை கண்ட குருடர்களின் கூற்றேயாகும். யானையின் உண்மை உருவை உள்ளது உள்ளபடியே கண்டு கூறிடும் கண்ணுடையோன் சொல்லாகாது.

எச்சரிக்கையாகப் பயன்படுத்தாவிட்டால், மனிதனுடைய உடலை புட்டவியலாக வேக வைத்துவிடும் நீராவி. அதே நீராவிதான், அறிவுக் கூர்மையுடனும், விழிப்புடனும் பயன்படுத்தப்படுகிறபொழுது, ஏழுகடலிலும் மிதந்துவரும்மரக் கலத்துக்கு ஆற்றலுள்ள விசையாகிறது. மின்சாரமும், கவலை குறைந்தால், ஆளைக் கருக்கிக் கொன்றுவிடுகிறது. கொலைக்குத் துணைபோகும் அதே மின்சாரம்தான், உலகை ஒளிமயமாக்கும் அற்புதத்தைச் செய்கிறது.

அதுபோன்றே, மனித குலத்தை வாழ்விக்க வந்த இயந்திர சாதனங்கள், மனித குலத்தின் பொதுச்சொத்தாக இல்லை. தனி உடைமை எத்தர்களின் ஏவலாளி ஆக்கப்பட்டுவிட்டது இயந்திரம்.

எனவே, கள்ளுண்டவன் கை சிக்கிய கூர்வாள் போல், மனிதகுலத்தை வாட்டத்திலும் வறுமையிலும் தள்ளும் பெருந்தீங்கினைப் புரிகிறது—புரியவும் சல்லடம் கட்டிக்கொண்டு இருக்கிறது, இயந்திரம்!

இயந்திரத்தை அடிமைகொண்டுள்ள இலாப வேட்டைக்காரர்கள், மக்களை இப் சிக்கின்றனர். மக்கள் வேதனை தாங்காமல் அலறுகின்றனர். தேய்ந்த பாதையிலேயே சென்று சென்று பல நாள் பழகிவிட்ட காரணத்தால் ஏற்பட்டுள்ள மனப் பழக்கம், எந்தப் புதுமையையும் முழுமூச்சாக எதிர்த்தாக வேண்டும் என்ற இயல்பை—திட நம்பிக்கையை, சில நல்லவர்களுக்குக் கொடுத்துவிடுகிறது. அந்த நல்லவர்களும், குறிப்பிட்ட ஒரு வரையறைக்குள் தங்கள் தவறுடைய கருத்தை நிறுத்திக் கொள்ளாமல், இயந்திர ஏற்பாட்டையே நையாண்டி செய்யக் கிளம்பி விடுகின்றனர்—அந்த நையாண்டியை இணையற்ற தத்துவம் எனவும் கூறி விடுகின்றனர்.

அவர்கள் கருத்து வெற்றி பெற முடியாதது. இதுவரை ஒரு துளியும் வெற்றி பெற்றதில்லை என, வரலாறு திட்டவட்டமான சாட்சியம் சொல்லி வருகிறது. நிற்க,

நெசவாலைகளில் தற்சமயம் பயன்படுத்தப்பட்டு வரும் இயந்திரங்களை அகற்றிவிட்டு, அதற்குப் பதிலாக சிக்கனச் சிரமைப்புடைய புதிய இயந்திரங்களைப் பொருத்த வேண்டுமென வடநாட்டு ஆலைகள் தீவிர முயற்சி செய்து வருகின்றன. அத்தீவிரத்திற்கு எள்ளத்தனையும் குறையாத அளவிற்கு, அவ்வாலைகளில் தொழில் செய்துவரும் தொழிலாளர்களும் ஆலை அரசுகளின் புதிய போக்கை முழு மூச்சுடன் எதிர்க்கின்றனர்.

புதிய இயந்திர சிக்கனச் சிரமைப்பின் காரணமாக, நிச்சயமாக, ஆலைத் துணிகளின் உற்பத்திச் செலவு இன்று ஆவதைக் காட்டிலும் கணிசமாகக் குறையும் என்பதில் ஐயமில்லை. அதே நேரத்தில் ஆலை அரசுகளின் இலாபமும் இரட்டிப்பாகும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

அதுபோன்றே, இயந்திர சிக்கனச் சிரமைப்பால், ஆயிரக்கணக்கான தொழிலாளிகள், நெசவாலைகளிலிருந்து வெளியேற்றப்படுவர் என்பதும், ஏற்கனவே முடிவு கட்டப்பட்ட பேருண்மையுமாகும். ஆட்குறைப்புக்கு இடமில்லையானால் உற்பத்திச் செலவில் குறைவு ஏற்பட அறவே நியாயம் கிடையாது.

எனவே, நெசவாலைகளில் நுழைக்க இருக்கும் சிக்கனச் சிரமைப்பை எதிர்த்து, நேரடி நடவடிக்கையில் இறங்கப் போகின்றனர் வடநாட்டில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள்.

அந்த தொழிலாளர்களின் போக்கைக் குறித்து ஆலை அரசுகள் மிரட்டல் அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளன.

"சமுதாய விரோதமானது—தொழில் விரோதமானது—சட்ட விரோதமானது."

"வேலை நிறுத்தத்தின் விளைவாக உடனடியாக 46,000 தொழிலாளர் வேலை இழப்பர்."

இப்படி மிரட்டுகின்றனர் தொழிலாளர்களை, வட இந்திய ஆலை அரசுகள். மிரட்டலில், 'சமதர்ம மாதிரி' பொருளாதார ஏற்பாட்டின் சிருஷ்டிகர்த்தாவான பண்டிதர் அரசாங்கத்திற்கும் எச்சரிக்கை விடுத்திருக்கிறது, வடக்கத்திய ஆலை அரசுகள்!

"தினம் ஒன்றுக்கு 10-லட்சம் கஜம் துணி உற்பத்தியை நாடு இழக்கும்."

"ஆடைஉடுத்தும் 90,000 பொது மக்கள் பாதிக்கப்படுவர்."

"ஆயிரக்கணக்கில் பஞ்சு உற்பத்தி செய்யும் விவசாயிகள் தொல்லைப்படுவர்."

இவ்வாறு பொதுமக்களுக்கு நஷ்டம் ஏற்படும் என எடுத்துக் காட்டி, வேலை நிறுத்தம்செய்ய இருக்கும் தொழிலாளர்களை, தங்கள் விரோதிகளாகக் கொள்ளுமாறு பொது மக்களுக்குத் தூபமிடுகின்றன வடநாட்டு ஆலை அரசுகள்!

தொழிலாளர்களுக்கு!

"தொழிலாளர்களே! ஆயிரக்கணக்கில் வேலை இழந்து விடுவீர்! வேலைநிறுத்தம் செய்யாதீர்!"

அரசாங்கத்திற்கு!

"அரசாங்கமே! தொழிலாளர் வேலைநிறுத்தம் சட்ட விரோதமானது—சமுதாய விரோதமானது—தொழில் விரோதமானது! முன்பின் யோசியாமல் தொழிலாளர்களை ஒடுக்கு!"

விவசாயிகளுக்கு!

"தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தால், உங்கள் பஞ்சு விற்காது! பஞ்சு விற்பனையாகாததால், நீங்கள் நஷ்டப் படுவீர்கள்!"

பொது மக்களுக்கு!

"வேலை நிறுத்தத்தால் தினம் ஒன்றுக்கு 10 லட்சம் கஜம் துணி உற்பத்தியில்லாது போகும்! அதனுல் துணி விலையில் கூடும்! பலன், நீங்கள் நிர்வாணமாகத் திண்டாடுவீர்! எனவே, தொழிலாளர்களுக்கு ஆதரவு காட்டாதீர்கள்! அவர்களை, உங்களுடைய ஜன்ம விரோதிகளாகக் கருதி நடந்து கொள்ளுங்கள்!"

இவ்வளவும், பரோபகாரமாகவும், தர்ம சிந்தனையோடும் விளக்கம் கூறியுள்ள வடநாட்டு ஆலைச் சீமான்கள், தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தால், தங்களுடைய இலாப வேட்டையில் எவ்வளவு நஷ்டமேற்படும்--துண்டு விழும் என்பதை மட்டும் விளக்காமல் விட்டுவிட்டது ஏனோ?

அதை, அவர்கள் கூறுவதற்கு, விளக்கம் தேவையே இல்லை; உண்மை அனைவரும் அறிந்துள்ளதே. வேலை நிறுத்தம் செய்வதெனத் தொழிலாளர் முரசு அறைந்து விட்டார்கள்!'தொழிலாளர்களுக்கு எதிராகப் போராட்டம் தொடுத்தே தீருவோம்' என ஆலைக்கோமான்கள் எதிர் முரசு கொட்டிவிட்டனர்!

'சமதர்மம் மாதிரி'யில் ஒவிசித்திரமான சமுதாயத்தைக் காண இருக்கும் பண்டிதரோ: அமைதி, ஒழுங்கு என்ற பெயரால், அடக்குமுறையை ஏவத்தான் போகிறார் என்பது அனுபவம். தேசிய ஏடுகளோ, பண்டிதரின் அடக்குமுறையிலே, நாட்டு நலம் பொதிந்து இருக்கிறது எனத் துந்துபி முழங்கப் போகின்றன.

புகைகிறது! புகைவது நன்ருகத் தெரிகிறது! வெடிக்குமா? தீக்குழம்புகளை உமிழுமா? இரண்டும் இனிதான் தெரிய வேண்டும்.

உத்திர பிரதேசத்தை பிரிப்பது கூடாது!

புனரமைப்புக் குழுவிடம் உ. பி. சர்க்கார் எச்சரிக்கை

"உத்திரப் பிரதேசத்தை எக்காரணத்தைக் கொண்டும் பிரிக்கக் கூடாது,"

என்று உ. பி. சர்க்கார் மாநிலப் புனர் அமைப்புக் குழுவிற்கு கொடுத்துள்ள அறிக்கை ஒன்றில் எச்சரித்திருக்கிறது.

பூகோள அமைப்புகள், சரித்திர நடைமுறைகள், பொருளாதாரக் குறிப்புகள் அனைத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால், உ. பி.-யைப் பிரிக்காது அப்படியே வைத்திருக்க வேண்டுமென்பதைஉறுதிப்படுத்துகிறது.

"இப்படி ஒழுங்காக அமைந்துள்ள நிலப்பரப்பைப் பிரிக்க முயல்வது விரும்பத் தகாத விளைவுகளை உண்டாக்கும்," என்று உ. பி. சர்க்கார் எச்சரித்திருக்கிறது.

உத்திரப் பிரதேசத்தைப் பிரிக்கும் பிரச்சினை, பலரின் மத்தியில் எழுப்பப்பட்டிருக்கிறது என்றாலும், இதைப்பற்றி கடுமையான விவாதங்கள் நடைபெற்றிருக்கின்றன.

'இப்போது உலகிலே பிரிவினை மனப்பான்மை காணப்படுவதால், பலம் வாய்ந்த பிரதேசங்கள் அமைவது அவசியமாகும்' என்று உ. பி. சர்க்காரின் அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

ரூ. 4 கோடி பெறுமான நகைகள் கைப்பற்றினர்!

புதுடில்லி, ஏப். 29—

பாகிஸ்தானிற்குக் கள்ளத்தனமாக நகைகள் கடத்திச் செல்லப் படுவதற்கென நடைபெற்ற முயற்சி ஒன்றினை யொட்டி, இங்குள்ள ஒரு பாங்கியிலிருந்து ரூ. 4 கோடி மதிப்புப் பெறுமான நகைகள் கைப்பற்றப்பட்டன என்ற செய்தி பற்றி சர்க்காருக்குத் தகவல் கிடைத்துள்ளதாக டில்லி மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

புதுவை தேர்தல்கள்: சில விபரங்கள்

புதுவை மாநிலத்திலிருக்கும் பூர்வாங்க வாக்காளர் பட்டியலில் இதுவரையிலும் 1,64,667 வாக்காளர்கள் பதிவு பெற்றுள்ளனர். ஆட்சேபனை மனுக்கள் தாக்கல் செய்யும் தேதி மேற்கொண்டு நீடிக்கப்பட்டுள்ளதால், அம்மாநிலத் தேர்தல் ஜூன் திங்களிலிருந்து ஜூலைத் திங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

முழுச் சுதந்திரமும் பெறவில்லையே!

"சீனவோ, அல்லது இந்தோ-சீனவோ இன்னும் முழுமையாகச் சுதந்திரம் பெற்று விட்டதாகக் கூறி விடுவதற்கில்லை; சீனவிற்குப் பார்மோசாவும், இந்தோ-சீனவுக்கு டச்சு நியூகினியாவும் கிடைத்தால்தான் அவ்வாறு கருத முடியும்," என்று மக்கள் சீனப் பிரதமர் சூ—யென்—லாய் ஜகார்தாவில் கூறியிருக்கிறார்.

மடாலயச் சீர்திருத்தச் சட்டம்!

எதிர்த்து மடாதிபதிகள் வழக்கு!

சென்னை அரசாங்கத்தின் மடாலய சீர்திருத்தச் சட்டத்தை எதிர்த்து ஒன்பது மடாதிபதிகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்கள்.

"மடாலய சீர்திருத்த சட்டத்தில் சொல்லியிருக்கிறபடி எங்களிடம் பணம் எதுவும் வரியாக வசூலிக்கும் அதிகாரம் அரசாங்கத்திற்கு இல்லை," என்று மடாதிபதிகள் தங்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளார்கள்.

மடங்களுக்கு உள்ள சொத்துக்களெல்லாம், பக்தர்களால் பாத காணிக்கையாகக் கொடுக்கப்பட்டதாகும்; ஆகையால், அது எங்களின் சொத்தாகும்; எங்களிடம் வசூலிக்கப்படுகிற பணம் திரும்ப எங்களுக்கே செலவு செய்யப்பட வேண்டும்; இல்லாவிட்டால் நாங்கள் தற்போது செலுத்தும் பணம் அரசாங்கத்திற்குக் கொடுக்கப்படும் வரிபோல் ஆகிறது; அம்மாதிரி வரி வசூலிக்கும் சட்டம் செல்லாது," என்று மனுவில் கூறப்பட்டிருக்கிறதாம்.

நீதிபதி இராஜகோபாலன் அவர்கள் மனுவை அனுமதித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டார்.

இலவங்கம், கோகோ பற்றி ஆராய்ச்சி

சென்னை சர்க்கார் திட்டம்

இலவங்கம், கோகோ, சாதிக்காய் ஆகியவைகள் பற்றிய ஆராய்ச்சிகள் நடத்த சென்னை மாநில சர்க்கார் ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தை மேற்கொண்டுள்ளதாம். ஏற்றுமதிக்குக் கிராக்கியுள்ள இந்த வகையான பொருட்களின் அபிவிருத்தி குறித்தும், விளைச்சல் பற்றியும் மேலும் ஆராய்ச்சிகளும் நடத்தப் பெறுமாம்.

இத்திட்டத்திற்குச் செலவாகலாமென மதிப்பிடப்பட்டிருக்கும் தொகை ரூ 52,000 என்றும், திட்டத்தின் முக்கியத்துவத்தை உத்தேசித்து இந்திய விவசாய ஆராய்ச்சிக் குழுவே அந்த முழுச் செலவையும் ஏற்றுக்கொள்ள சம்மதம் தந்துள்ளதெனவும் கூறப்படுகிறது.

உதகமண்டலத்தில் இறுதி உருவமாம்!

"மே திங்கள் மத்தியில் நிலச் சீர்திருத்த மசோதா இறுதியாகத் தயாரிக்கப்பட்டு விடும்; அனேகமாக மே மாதம் 15, 16, 17-ந் தேதிகளில் மந்திரி சபையின் நிலச் சீர்திருத்த துணைக் குழு உதக மண்டலத்தில் கூடி மசோதாவிற்கான இறுதி உருவம் கொடுக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது" என்று ரெவின்யூ அமைச்சர் மாணிக்கவேலர் கூறியிருக்கிறார்.

ரத்து செய்தார்!

இந்த மாதம் தமிழ் நாட்டில் சுற்றுப்பயணம் செய்வதெனவும், கோடையில் உதகமண்டலத்திலும், கோடைக்கானலிலும் தங்குவதெனவும் திட்டமிட்டிருந்த இந்தியக் குடியரசுத் தலைவர் இராசேந்திரர், தமது தமிழ் நாட்டுப் பயணத்தையே ரத்து செய்துவிட்டார் என்று தெரிகிறது.

குடும்பக் கட்டுப்பாடு: திட்டக் குழு சிபாரிசு:

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டங்களுக்கென மாநில சர்க்கார்களுக்கும், தனிப்பட்ட நிறுவனங்களுக்கும், 1954—55ல் ரூ. 14 லட்சமும், 1955—56ல் ரூ. 16 லட்சமும் மானியத் தொகைகளாகத் தரப்பட வேண்டுமென்று, மத்திய சர்க்கார் குடும்பக் கட்டுப்பாடு திட்ட ஆராய்ச்சி, வேலைத் திட்டக் குழு சிபாரிசு செய்துள்ளதாம்.

இந்து சமுதாய அமைப்பு நாசமாக்கப்படுகிறதாம்!

இந்து திருமண மசோதா ஜனநாயகத்திற்கு விரோதமானதாம்

சாட்டர்ஜியின் எதிர்ப்பும்-ஏக்கமும்!

புதுடில்லி, ஏப். 29—

இந்து திருமண மசோதா ஜனநாயக விரோதமானது; அரசியல் சட்டத்திற்கு முரணானது; ஆயிரக்கணக்கான மக்களால்—நாம் உள்பட—பலநூறு ஆண்டுகளாக வளர்க்கப்பட்டு வரும் இந்து சமுதாய அமைப்பையே இந்த மசோதா அழிக்க இருப்பதால் 'இது 'ஜனநாயகத்திற்கு விரோதமானது,' என்று நான் கூறுகிறேன்,"

—என்று, மக்கள் சபையில் இந்து திருமண மசோதாவை எதிர்த்துப் பேசுகையில் என். சி. சாட்டர்ஜி கூறினார்.

"இப்படி இந்த சமூக அமைப்பை கலைக்கும் முயற்சி, நாட்டின் அனுமதியைப் பெற்ற பின்னரே செய்யப்பட வேண்டும்," என்று அவர் மேலும் கூறினார்.

தொடர்ந்து பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:—

"இந்து திருமணம் என்பது ஒரு ஒப்பந்தம் அல்ல; அது ஒரு புனிதமான ஏற்பாடு; இப்புனித முறை நமக்கு ஒரு நிரந்தரமான வாழ்வைத் தந்தது; ஒரு குறிப்பிட்ட நாகரிகத்தை நமக்கு அளித்திருக்கிறது; மற்ற நாடுகளுக்குக் கிடைக்காத உயர்தர வாழ்வை நமக்குக் கொடுத்திருக்கிறது; இது போன்ற புரட்சிகரமான மசோதாவை பொதுத் தேர்தலுக்குப் பின்னர் வரை ஏன் ஒத்திப் போடக்கூடாது?

"நாடு முழுமைக்கும் ஒரேவிதமான சட்டத்தை சர்க்கார் ஏற்படுத்தும் என்று அரசியல் சட்டம் கூறுகிறது; இந்த விதிக்குப் புறம்பாக ஏன் செல்கிறீர்கள்?

"இந்த மசோதா, 'அரசியல் சட்டத்தின் முன் அனைவரும் சமம்,' என்று கூறும் விதிக்குப் புறம்பானதாகும்.

"ஒரு கணவனுக்கு ஒரு மனைவி தான் என்பதை நிலைநாட்டப் போகிறீர்கள் என்றால், ஏன் இந்துக்களுக்கு மட்டும் அப்படியிருக்க வேண்டும்? முஸ்லிம்களுக்கும் இதை அமுல் செய்வதுதானே?"

இந்தியா பெற்றுள்ள வெளிநாட்டு உதவி

1948-ம் ஆண்டு முதல் 1954—55-ம் ஆண்டுவரை திருத்தப்பட்டுள்ள மதிப்பீடுகளின்படி, உதவி மானிய அடிப்படையில், நிதி உதவியாக அமெரிக்காவிடமிருந்து ரூ. 40.48 கோடியும், பிரிட்டனிடமிருந்து ரூ. 6.2 லட்சமும் இந்தியா பெற்றுள்ளதாம்.

1948 முதல் 1954—55-ம் ஆண்டுவரை இந்தியா நேச நாடுகளுக்கு நிதி உதவியாக 213 73 - லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறதாம்.

கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் மக்கள் சபையில் இந்திய நிதி மந்திரி சி. டி. தேஷ்முக் இந்த தகவல்களைத் தந்திருக்கிறார்.

இந்திய இரயில்வேக்கள்

இரும்பு, எஃகு உபயோகம் அதிகரிக்கிறது

இந்திய இரயில்வேக்களின் இரும்பு எஃகுத் தேவை, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட முடிவுக் காலத்தில் வருடமொன்றுக்கு 10 லட்சம் டன்னாக இருக்குமெனக் கூறப்படுகிறது.

கடந்த ஒன்றிரண்டு ஆண்டுகளின் தேவையைக் காட்டிலும் இது 200 சத விகித அதிகத் தேவையாகும்.

கடந்த இரண்டாண்டுகளிலும் சராசரியாக இந்திய இரயில்வேக்களுக்கு 3,50,000 டன் இரும்பு எஃகு தேவைப்பட்டதாம்.

இது மட்டுமின்றி சில குறிப்பிட்ட வகையான இரும்பு எஃகுப் பொருள்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டியிருந்தது. கடந்த மார்ச் மாதத்துடன் முடிந்த இரண்டு வருடங்களில் சுமார், 1,40,000 டன் இரும்பு எஃகு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாம்.

சூடான்: தனி நாடாக இருக்கும்

எகிப்துடன் கூட்டாட்சி கிடையாது

கல்கத்தா, ஏப். 26—

"சூடான் பூரண சுதந்திர நாடாக இருக்க விரும்புகிறது; எகிப்துடன் சேர்ந்து கூட்டாட்சி நாடாக இருக்க விரும்பவில்லை," என்று சூடான் பிரதமர் சையத் இஸ்மாயில் அல் அகாரி குறிப்பிட்டார்.

இரண்டு நாடுகளுக்கும் பொதுவாக நைல் நதி தண்ணீர், பொருளாதாரம் போன்ற பல பொது பிரச்சினை இருக்கிறது என்றும், அதற்காக கூட்டாட்சி அவசியம் இல்லை என்றும், இரு நாடுகளுக்கும் பொதுவாக உள்ள பிரச்சினைகளை இரு நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினால் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கழகச் செய்திகள்

ஆமதாபாத் நரோடா தி. மு. கழகம்

24—4—55 மாலை 4½ மணிக்கு, கழக இல்லத்தில், தோழர் நா. முனிசாமி தலைமையில் நடைபெற்ற கழகப்பொது உறுப்பினர்கள் கூட்டத்தில், மே திங்கள் 1-ந் தேதியிலிருந்து 10-ந் தேதிக்குள் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடத்துவதென்றும், தோழர்கள் இராவைத்திலிங்கம், ப. ஆதிமூலம், மு பெரியசாமி, கே. சிதம்பரம், சந்திரன், கணேசனார், ஆகியோர் கொண்ட ஆய்வுக் குழு ஒன்றை நியமித்தும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தேவகோட்டையில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

25—4—55 மாலை நேதாஜி சதுக்கத்தில், தோழர் சுப. மீனாட்சி சுந்தரம் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் குரு. இதயமணி சிறிது நேரம் பேசியதும், தோழர் சி. பி. சிற்றரசு தி மு கழகக் கொள்கைகளை விளக்கியும், சாதி வேற்றுமைகளால் விளையும் கொடுமைகளை எடுத்துக்காட்டியும், ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப் பட்டிருப்பதை எடுத்துக்காட்டி வன்மையாகக் கண்டித்தும் சொற்பொழிவாற்றினர்.

உள்ளிக்கோட்டை தி. மு. கழகம்

27—4—55 இரவு 8 மணிக்கு, தோழர் எஸ். உத்திரபதி இல்லத்தில், தோழர் கோ. தங்கராசு தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், 13—4—55ல் நடைபெற்ற பொதுக்கூட்ட வரவு — செலவு கணக்குகள் பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப் பட்டதுடன், தி. மு கழகப் புதிய பொதுச் செயலாளராகத் தோழர் இரா. நெடுஞ்செழியன் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்குப் பாராட்டுதல் தெரிவித்தும், மாநில மாநாட்டிற்கு நிதி சேர்க்கும்படி கழகத் தோழர்களைக் கேட்டுக் கொண்டும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சூரப்பள்ளி தி. மு. கழகம்

26—4—55 இரவு 8 மணிக்கு, தோழர் ப. செல்லப்பன் இல்லத்தில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், சூரப்பள்ளி கிராமத்தில் சுமார் பாதி அளவுக்கு சலகண்டபுரம் பஞ்சாயத்தில் சேர்த்துக் கொள்வதற்கு எடுத்துக் கொள்ளப்படும் முயற்சி குறித்து வருத்தம் தெரிவித்து, அம்முயற்சியைக் கைவிடும்படி கேட்டுக் கொண்டும், கைத்தறித் தொழில் பாதுகாப்பிற்கென சர்க்கார் தருகின்ற நிதியை தனிப்பட்ட துணி வியாபாரிகளுக்குத் தந்து துஷ்பிரயோகம் செய்யப்படுவதைக் கண்டித்தும், எனவே கைத்தறி கூட்டுறவு விற்பனை சங்கங்களுக்கே அந்நிதியை நேரடியாக வழங்குமாறு கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பாராட்டு விழா

23—4—55 மாலை 3 மணிக்கு தஞ்சை மாவட்ட தி மு. கழகச் செயலாளர் என். எஸ். இளங்கோ, பொதுக் குழு உறுப்பினர்களான தோழர்கள் சந்தானம், கிட்டப்பா, அடைக்கலம் ஆகியோருக்குப் பாராட்டும், தேனீர் விருந்தும் அளிக்கப்பட்டது.

பொதுக் கூட்டம்

அன்று மாலை 6½ மணியளவில், வெங்கிடங்காலில் தோழர் ஏ. எஸ். பாண்டியன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் என். எஸ். இளங்கோ, அடைக்கலம், கிட்டப்பா, சந்தானம் ஆகியோருக்குப் பாராட்டிதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன.

செய்திச் சுருள்

திருப்பூர் முத்தமிழ் நடிகர் மன்றம்

25—4—55 மாலை 5 மணியளவில், ஒடக்காடு, பங்களாரோடு, எண் 26 இல்லத்தில், தோழர் முத்து தலைமையில் நடைபெற்ற மன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், புதிய செயற்குழு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப் பட்டனர்:—பொறுப்பாளர்: ஐ எஸ். பாட்சா; செயலாளர்: எஸ். எம். சண்முகம்; துணைச் செயலாளர்: எம். ஜி. குருமூர்த்தி; பொருளாளர்: வி. ஆர். பொன்னுசாமி; பயிற்சி ஆசிரியர்: தி. மு. கிரீன்; செயற் குழு உறுப்பினர்கள்: ஆறுமுகம், மாரிமுத்து, முத்துச்சாமி, சொக்கப்பன், சுந்தரம், குமாரசாமி, இராமசாமி, இலக்குவன், கந்தசாமி, எஸ். மீசையன்.

நெடுஞ்செழியன் மன்றப் படிப்பகத் திறப்பு விழா

தேனி நகர் நெடுஞ்செழியன் மன்றத்தின் சார்பில், நெடுஞ்செழியன் மன்றப் படிப்பகத் திறப்பு விழா 27—4—55ல், தோழர் கு இராசு தலைமையில் நடைபெற்றது. தோழர் கே. பி பி. எம். நாராயணசாமி படிப்பகத்தைத் திறந்துவைத்தார். தோழர் ஆ. கருப்பையா கழகக் கொடியேற்றினார். தோழர்கள் தேனிச் செழியன், இந்திரசித்து, காதர் ஷமதீன், ஆ. சங்கரலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சோழவந்தான் திருவள்ளுவர் கழகம்

24—4—55 காலையில், மேற்படி கழகத்தின் வாராந்திரக் கூட்டம், தோழர் இராமய்யா தலைமையில் நடைபெற்றபோது, தோழர் கு குருநாதன், 'அழுக்காறாமை' என்னும் அதிகாரத்திலுள்ள முதல் ஐந்து குறட்பாக்கள் குறித்துச் சொற்பொழிவாற்றினார்.

பாரதிதாசன் பிறந்த தின விழா

25—4—55 இரவு 9 மணிக்கு, பம்பாய், கூபரோஜ் திடலில், தோழர் எஸ். பி பெருமாள் தலைமையில், பம்பாய் கொலாபா தி மு. க. கிளையின் சார்பில், தோழர் பாரதிதாசனின் பிறந்ததின விழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் ஏ. எஸ். தாஸ், க சு. செகநாதன், எஸ். கே ராஜு, எஸ். பி. பெருமாள் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பரவை திராவிடர் சொற் பயிற்சி மன்றம்

26—4—55 மாலை 4 மணிக்கு, மாந்தோப்பில், தோழர் சா. பிச்சை தலைமையில் நடைபெற்ற மன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—தலைவர்: எம். பழனிவேலு; செயலாளர்: கே. அயோத்தி; துணைச் செயலாளர்: ஆ. முருகன்; விளம்பர உறுப்பினர்கள்: க. திருஞானம், கார்மேகம்.

பல மதங்களின் கூட்டுச் சேர்க்கையே சனாதன தர்மமாம்!

வகுப்புக்கலவரம் நடைபெற்ற நாட்டில் மதவெறி இல்லையாம்!

இராசேந்திர பிரசாதின் இந்துமதப் பிரச்சாரம்

கோரக்பூர், ஏப். 29—

"சனாதன தர்மம் என்பது இந்திய கலாச்சாரம் உருவாக்கிய ஒன்றாகும்; சனாதன தர்மம், எல்லா மதங்களினுடையவும் கூட்டுச் சேர்க்கையாகும்,"

—என்று இந்திய ஜனாதிபதி இராசேந்திர பிரசாத் குறிப்பிட்டிருக்கிறார்.

"இந்தியாவில் பலதரப்பட்ட மார்க்கங்கள் இருப்பினுங் கூட, மற்ற நாடுகளிலும், மதங்களிலும் காணப்படுவது போன்ற மதவெறி இந்தியாவில் கிடையாது,"

என்று இராசேந்திர பிரசாத் மேலும் கூறினார்.

கோரக்பூரில் உள்ள கீதா பிரஸ் அச்சகத்தின் கட்டிட வாயிலில் அமைக்கப்பட்டிருக்கும் 'கீதா தவர்' திறப்பு விழாவின்போது மேலும் அவர், 'பல மதங்களின் கூட்டுச் சேர்க்கைதான் சனாதன தர்மம்,' என்பதை விளக்கும் முறையில் 'பகவத்கீதை இந்த அருமையான தர்மத்திற்கு உதாரணமான நூல் ஆகும்,' என்று குறிப்பிட்டார்.

"சனாதன தர்மம் ஒன்றுமட்டுமே 'மார்க்கம் பெற வழி' என்று எப்பொழுதும் சொல்லப்பட்டது; ஆகவேதான், இந்த நாட்டில் ஒரு குறிப்பிட்ட பக்திமார்க்கத்தைக் கடைப்பிடிக்குமாறு யாரையும் வற்புறுத்தவில்லை," என்று ஜனாதிபதி கூறினார்.

"ஆனால், மற்ற மதங்கள், 'உலகில் உண்மையைக் காண ஒரே ஒரு வழிதான் இருக்கிறது,' என்று கூறுகின்றன; இந்த வழியில் நம்பிக்கையில்லாதவர்கள் மனித வாழ்வின் உயர்நிலையான உண்மை நிலையை அடைய முடியாது; இப்படி ஏற்பட்ட அமைப்பு, ஒருவர், 'தனது மார்க்கமே சிறந்தது—சரியானது,' என்று கூறும் நிலையை ஏற்படுத்தியது; ஆகவே, அந்த வழிக்கு மற்றவர்களை அழைத்துவர மதமாற்றம் செய்வது போன்ற காரியங்கள் ஏற்பட்டன," என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தியா இப்போது சுதந்திரத்துடன் இருக்கிறது என்றும், அது தனது கலாச்சார பெருமையை இழந்துவிடாது என்றும், அகிம்சையின் மூலமே இதைக் காப்பாற்ற முடியுமென்றும் அவர் எடுத்துச் சொன்னார்.

ஜாதிகளை ஒழிக்கும் மசோதா!

மக்கள் சபையினர் நிராகரிப்பு

புதுடில்லி, ஏப். 21—

இந்து மதத்தில் காணப்படும் பல்வேறு ஜாதிகளுக்கு சர்க்கார் அங்கீகாரம் அளிக்கக் கூடாது என்றும், ஜாதிகள் அனைத்தையும் ஒழித்துவிட்டு இந்து மதத்தார் அனைவரும் ஒரே தரத்தினராக சர்க்கார் ஏடுகளில் பதியப்படவேண்டும் என்றும் கோரி, மக்கள் சபையில் பல்சிங் ஜிதாரா என்ற உறுப்பினர், மசோதா ஒன்றைக் கொண்டு வந்தார். இந்த மசோதா சர்க்காரின் எதிர்ப்பினால் தோற்றுப்போயிற்று.

இந்த மசோதாவின் கருத்தைத் தாம் ஆதரிப்பதாகவும், ஆனால் இந்த மசோதாவை ஆதரிக்கும் நிலையில் நாட்டில் சூழ்நிலைகள் உண்டாகவில்லை என்றும் அமைச்சர் பி. என் தத்தர் மசோதாவை எதிர்த்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அரசியல் சட்டத்தில் சமூக இழிவுகள் நீக்கப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தாலும், நாம் இதுபோன்ற செய்திகளில் அவசரப்பட இயலாது என்றும், எல்லா மக்களையும் நம்முடன் அழைத்துச் செல்லவேண்டியிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

1943-ல், இம்மாதிரியான மசோதா ஒன்று நிவாகரினால் கொண்டுவரப்பட்டது குறித்து அமைச்சர் பேசுகையில், இது போன்ற ஜாதிப் பிரிவுகளை அங்கீகரிப்பது அவசியமானது என்றும், அப்போதுதான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனிச்சலுகைகளை அளிக்க இயலும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

"அதிகார பூர்வமாக ஜாதிப் பிரிவுகளை நீக்கிவிட்டால், பிற்பட்ட மக்களுக்கு அது தீங்கு பயப்பதாகும், என்று அவர் மேலும் கூறினார்.

"சர்க்கார் உத்தியோகங்களுக்கு அரசியல் சட்டம் தந்துள்ள விதிதப்படி பதவிகள் அளிக்கப்படவும், பாராளுமன்றத் தேர்தலுக்கு பிரதிநிதித்துவ எண்ணிக்கையை நிர்ணயிக்கவும் ஜாதிப் பிரிவுகள் அவசியம் தேவைப்படுகிறது," என்று அமைச்சர் மேலும் கூறினார்.

உல்லாசப் பிரயாணத்தை அபிவிருத்தி செய்வதற்காக இந்திய சர்க்கார் வகுத்துள்ள ஆறுண்டுத் திட்டத்துக்கு 15 கோடி ரூபாய் செலவாகும்?

நெடுஞ்செழியன் முழக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுப். இன்று தி. மு. கழகம் 'மே நாள்' விழா கொண்டாடுகிறது திராவிடத்தில் உள்ள பாட்டாளி மக்கள் எழுச்சி பெறவும், தங்கள் உரிமையை நிலைநாட்டுவது எப்படி என்று சிந்திக்கவும் நாம் 'மே நாள்' கொண்டாடுகிறோம்.

"இதே நேரத்தில் தேம்ஸ் நதிக் கரையிலே, பாரிஸ் பூங்காவிலே, சிகாகோ நகரிலே, மாஸ்கோ செஞ்சதுக்கத்திலே, இன்னும் எங்கெங்கு தொழிலாளர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம், 'மே நாள்' கொண்டாடுகிறார்கள். இறந்தகால கணக்கைச் சரிபார்க்கவும், 'இதுவரை பெற்ற உரிமைகள் என்ன, இனிப் பெற வேண்டிய உரிமைகள் என்ன' என்பதை ஆராயவும், 'மே நாள்' விழா கொண்டாடுகிறோம்.

"இந்த நாட்டில், சுயமரியாதை இயக்கம்தான் முதல் முதலில் 'மே நாளை'க் கொண்டாடியது. ஒரு காலம் இருந்தது; அப்போது ஒருவனுடைய உழைப்பை ஒருவன் கேட்கவும், உழைப்பைப் பெற்ற பின்னர், அவன் கொடுக்கும் பணத்தைப் பெற்றுக்கொள்ளவுமான நிலை இருந்தது; பின்னர், 'உழைப்புக்கேற்ற ஊதியம்' என்ற நிலை வளர்ந்து, இப்போது, 'சக்திக்கேற்ற உழைப்பு—தேவைக்கேற்ற ஊதியம்,' என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

"அக்காலத்தில், அதிகாரம் யாரிடம் இருந்ததோ, எவரிடம் 'ஆள்—அம்பு' அதிகம் இருந்ததோ அவனே ஜமீன்தாராகவும், மிட்டா மிராசு ஆகவும் இருக்க முடிந்தது. யார் ஏமாற்றுக்காரனோ, யார் தடிகொண்டு தாக்கும் வல்லமை பெற்றவனோ, அவனிடம் சொத்துக்கள் உரிமை கொண்டாடியிருந்தன.

"அதன் பின்னர், பிறப்பின் காரணமாகச் சொத்துக்கள் ஒருவனிடம் போய்ச் சேர்ந்தன.

"அண்ணாமலை செட்டியாருக்கு மகனாகப் பிறந்த காரணத்தால் மட்டுமே முத்தையா செட்டியாருக்கு சொத்துக்கள் இருக்கின்றன; சாமியப்ப முதலியாருக்கு மகனாகப் பிறந்த காரணத்தால் மட்டுமே ஒருவருக்கு சொத்துரிமை கிடைக்கிறது; ஆகவே, 'பிறப்பிற்கு உரிமை' என்ற நிலை இருப்பது மாறி, 'உழைப்புக்கு உரிமை' என்ற நிலை வேண்டும் என்றுதான் நாம் கேட்கிறோம்.

கடலின் அடித்தளத்திலே ஏராளமான முத்துக்கள் இருக்கின்றன; மலையின் அடியிலே மாணிக்கங்கள் உண்டு; பூமிக்கு அடியிலே இரும்பு உண்டு; ஆனால், அவைகளுக்கு அப்படியே எந்த மதிப்பும் கிடையாது.

"காட்டிலே வளர்ந்து நிற்கும் மரத்திற்கு, தனியாக மதிப்பு ஏதும் கிடையாது; அந்த மரம், தொழிலாளியின் உழைப்பினால் வெட்டப்பட்டு, நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டவுடன், அதற்கு விலை மதிப்பு ஏற்படுகிறது; விலை என்பதற்கு, 'உழைப்புக்குக் கொடுக்கும் மதிப்பு' என்று பொருள்.

"ஆனால், 'நம் நாட்டில் டாட்டாவும், பிர்லாவும் வாழ முடிகிறதே, அது எதனால்?' என்றால், 'அது, கடவுள் அருளால்,' என்கிறார்கள்; 'பி. அண்டு. சி. மில்லில் ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் அரும்பாடுபடுகிறார்களே, ஏன்?' என்றால், 'அதற்குக் கடவுளின் கட்டளை காரணம் என்கிறார்கள்.

"நாம் வாழும் திராவிட நாட்டில் வளமில்லையா? வரண்ட பாலைவனமா நம் நாடு? இங்கே வளம் உண்டு; இயற்கைச் செல்வம் உண்டு; உழைப்பதற்கு மக்கள் இருக்கிறார்கள்; போதுமான அறிவு இருக்கிறது; ஆனால், இவைகளுக்கு இடையே தொடர்பு இல்லை அத்தொடர்பு ஏற்பட வேண்டுமென்றால் திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்; அப்போதுதான் நம் நாட்டு மக்களின் சராசரி வருமானம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 275 என்ற தாழ்வு நிலை மாறும்.

'400 ஆண்டுகளுக்கு முன்னர் காடாகவும், கரம்பாகவும் இருந்த அமெரிக்காவில்—'சிவப்பு இந்தியர்கள், பச்சை இறைச்சியைத் தின்று வாழ்ந்த அமெரிக்காவில், இன்று சராசரி மனிதனின் வருமானம் பத்தாயிரம் ரூபாய்கள்; காரணம் அங்கே உழைப்புக்கு மதிப்பு இருப்பதால்தான்!

"மும்மூர்த்திகள் அடிக்கடி வந்து போகும் நமது நாட்டில்—பத்து அவதாரங்களும் இங்கேயே தோன்றிய நாட்டில், வருமானம் ரூ. 275 தான்! 'நாம் எப்படி வாழ்கிறோம்,' என்று இந்த நாட்டு மக்கள் சிந்திக்காத காரணத்தால்தான், தி. மு. கழகத்தவராகிய நாங்கள், அடிக்கடி சமுதாயப் பிரச்சினைகளைப் பற்றி எடுத்துச்சொல்கிறோம்.

"நமது நாட்டில் இயற்கை வளம், உழைப்பு, அறிவு இவை மூன்றும் இருந்தும், அவற்றிடையே தொடர்பு இல்லாத காரணத்தால் நாம் வாழமுடியவில்லை இங்கே, 'தொழில் செய்வதே ஈனம்,' என்று கருதப்படுகிறது யார் யார் உழைக்கிறார்களோ, யார் யார் இன்றியமையாத தொழிலைச் செய்கிறார்களோ, அவர்களெல்லாரும் இழித்து பேசப்படுகிறார்கள்; அவர்கள் இழித்துப் பேசப்பட வேண்டியவர்கள் — தீண்டப்படாதவர்கள்—ஒதுக்கப்பட வேண்டியவர்கள்—என்று ஆக்கப்பட்டு விட்டனர்.

"யார் யார் உழைக்காமல் இருக்கிறார்களோ, அவர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள் – வாழவேண்டியவர்கள்—என்ற நிலை ஏற்பட்டு விட்டது.

"தொழிலாளர்கள், தங்களது உழைப்பின் மேன்மையை உணருமாறு செய்யப்பட வேண்டும் 'இந்த நாடு, தொழிலை மதிக்காத நாடு,' என்ற அடிப்படைக் கருத்து மாறவேண்டும்; தொழிலாளர் மனதிலே எண்ணத் தெளிவு ஏற்பட வேண்டும்; உழைப்பவர்களுக்கு வேலை தருவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும்.

"ஆனால் நமது நாட்டில் உள்ள அரசாங்கமோ, 'ஆண்டையும் இருக்கட்டும் — அடிமையும் இருக்கட்டும்—சோஷலிசமும் இருக்கட்டும்,' என்கிறது; 'பஞ்சையும் இருக்கட்டும்—முதலாளியும் இருக்கட்டும்—மாதிரி சோஷலிசமும் இருக்கட்டும்', என்கிறது; இந்த நிலை மாறி, தொழிலாளர் வாழ்வு பெற வேண்டுமென்றால், திராவிட நாடு பிரிவினை தான் அதைச் சாதிக்க முடியும்."

மே தின விழா

★

ஆலந்தூர் (சென்னை)
4-5-55 மாலை 6-மணிக்கு
தர்மராசா கோவில் மைதானத்தில்
பேசுவோர்:
கே. ஏ. மதியழகன்
முகவை ஆர். எஸ். பாண்டியன்

★

முகவூர்
பொன்விழா மைதானத்தில்
4—5—55 இரவு 7 மணிக்கு
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
எஸ். முத்து

★

கோவை—சிங்காநல்லூர்
குமரன் சதுக்கத்தில்
5—5—55 மாலை
பேசுபவர்: ஈ. வெ. கி. சம்பத்

அது எப்படியோ?

'மனிதர்களுக்குப் பாதகம் நேரிடும் வகையில் அணுகுண்டுப் பரிசோதனைகள் நடத்தப்படமாட்டா' என்று, பிரிட்டிஷ் அயல் நாட்டமைச்சர் கூறியிருக்கிறார்.

சேலத்தில் மே தினம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

னத்தில் 1—5—55 மாலை 6-30 மணிக்கு மாபெரும் மே தின விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது நகரசபை உறுப்பினரான தோழர் வரதராசலு அவர்கள் தலைமை தாங்கினார்.

தோழர் ப. கண்ணன் சிறிது நேரம் பேசியதும், நகரச் செயலாளர் ஈ ஆர் கிருஷ்ணன் அவர்கள், சேலம் அம்மாப்பேட்டை காந்தியார் சிலையருகில் கட்டப்பட்டிருந்த தி. மு. கழகக் கொடியை இரண்டு தினங்களுக்கு முன்பு மோலீசார் பலவந்தமாக அப்புறப்படுத்திய ஜனநாயக விரோத நடவடிக்கையைக் கண்டித்துத் தீர்மானம் ஒன்று கொண்டுவந்து பேசினார்.

அதனை தோழர் ஈ. ஏ. ஆர். அரங்கநாதன் வழிமொழிந்தார்.

கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களும் தங்கள் கையொலி மூலம், காங்கிரசாரின் எதேச்சாதிகாரப் போக்கிற்கு தங்கள் கண்டனத்தைத் தெரிவித்தனர்.

அடுத்துத் தோழர் சிற்றுளி-சுப்பிரமணியம் சிறிது நேரம் பேசியதும், தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் மே தின வரலாறு குறித்தும், மே தினக் கொண்டாட்டத்தில் தி. மு. கழகம் பெறும் பங்கு குறித்தும் உரை நிகழ்த்தினார்.

இறுதியாக தோழர் கே. ஏ மதியழகன் அவர்கள், நாட்டு நிலையையும், கழகத்தின் இலட்சிய வளர்ச்சி குறித்தும் விளக்கி நீண்டதோர் சிறப்புரை நிகழ்த்தினார்.

பின் கிளைக் கழகச் செயலாளர் தோழர் பி. பி. பத்மநாபன் நன்றி நவில விழா இனிது முடிவுற்றது

நகரத்தின் வேறு இரு பகுதிகளில் வேறு கட்சியினர் மே தின விழாக் கூட்டங்கள் நடத்தியும் கூட, அவ்வப்போது அச்சுறுத்திக் கொண்டிருந்த மழை பொழியும் இருண்ட வானத்தையும் பொருட்படுத்தாது பல்லாயிரக்கணக்கான மக்கள் கழக நிகழ்ச்சியில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கதாயிருந்தது.

தென் வியட்நாம் கொந்தளிப்பு

தென் வியட்நாமின் அதிகார பீடத்தைக் கைப்பற்றுவதில் தற்போது அங்கு நிலவி வரும் குழப்பம் நிறைந்த நிலைமை மேலும் நீடித்து கலவரங்களை உண்டு பண்ணி வருவதாகத் தெரிகிறது

தென் வியட்நாம் பிரதமரான நிகு-தின்-தியமை ஆதரித்துவரும் 'புதிய புரட்சி சபை' மன்னர் பாவோ-டாயை டிஸ்மிஸ் செய்துவிட்டு, 'தென் வியட்நாமைக் 'குடியரசு' நாடாகவும் பிரகடனப் படுத்தியிருக்கிறது.

மன்னர் பாவோ-டாயினால் இராணுவ தளபதியாக நியமிக்கப்பட்டிருந்த வான்-வை என்பவரை, பிரதமர் தியமின் ஆட்கள் சிறைப் பிடித்து காவல் வைத்தனராம்!

இதற்கிடையில், இன்ஸ்பெக்டர்-ஜெனரல் வான்-வையும், பிரதம அதிகாரியான வான்-டையும்கூடிப் பேசி தங்களுக்குள் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார்களாம் அந்த ஒப்பந்தப்படி, ஜெனரல் வான்-வை இராணுவ தளபதியாகவும், வான்-டை பிரதம இராணுவ அதிகாரியாகவும் இருப்பதென தாங்களே முடிவெடுத்துக்கொண்டு அதனைப் பிரதமரிடம் நேரில் சென்று தெரிவித்தனராம்.

மீண்டும் கிடைத்துள்ள செய்தி ஒன்றின்படி, புதிய இராணுவத் தளபதியாகத் தம்மை ஆக்கிக் கொண்ட ஜெனரல் வான்-வை, சைகோனிலிருந்து ஓடி, அதற்கு 140 கல் தொலைவில் வடக்கே உள்ள தலாத் எனுமிடத்தில் தஞ்சம் புகுந்துள்ளதாகத் தெரிகிறது.

ஏற்கனவே பிரதமர் தியமின் இருப்பிடத்தில் சிறை செய்யப்பட்டிருந்த அவர், தாம் விடுவிக்கப்பட்ட உடனேயே ஓட்டம் பிடித்திருக்கிறார்.

அவர் ஓடி ஒளிந்துகொண்டதால் அவரது அதிகாரங்களெல்லாம் பிரதமர் தியமை ஆதரிக்கின்ற புதிய புரட்சி சபையினர் கையில் சிக்கியுள்ளது.

அவரைக் கைவிட்டுவிட்ட அவரது உயர்தர அதிகாரிகள், நான்கு பட்டாளத்தினருடன் அவரது வீட்டை நோக்கி வந்து கொண்டிருக்கையில், வான்—வை, விமான நிலையத்திற்கு ஓடிப்போய் மன்னர் பாவோ—டாயின் சொந்த விமானத்தில் ஏறிக்கொண்டு தலாத் இடத்திற்குச் சென்றுவிட்டாராம்.

தென் வியட்நாமின் புதிய புரட்சிச் சபை, மந்திரி சபை அமைக்குமாறு பிரதமர் நிகு—தின்—தியமிற்கு உத்திரவிட்டிருக்கிறது. பிரதமர் இன்று பிற்பகல் மந்திரி சபையைக் கூட்டி, 'புரட்சிச் சபையின் யோசனையை அங்கீகரிப்பதா, வேண்டாமா' என்பது பற்றி ஆலோசனை நடத்தினார் என்று தெரிகிறது. அங்கு ஏற்பட்டுள்ள திடீர் மாற்றங்கள் குறித்து விவாதிக்கும் பொருட்டு அமெரிக்கத் தூதுவரை நிகு—நின்—தியம் சந்தித்திருக்கிறார்.

தென் வியட்நாம் பிரதமருக்கு எதிராகப் படையெடுத்து நிற்கும் மத நிறுவனங்களான பீன் — ஜுயின், ஹோவா ஹாவோ ஆகிய கலகப் படையினரை ஒழித்துக் கட்டுவதற்கென புதிய புரட்சிச் சபை கடும்போர் நடத்தும் என்று கூறப்படுகிறது. பீன்-ஜுயினைச் சேர்ந்த துருப்புகள் சோலென் எனும் நகரிலும், மத்திய சைகோனின் கேந்திர இடங்களிலும் நிறுத்தப்பட்டுள்ளனவாம்.

தற்போது தெற்குப் பிரான்சில் இருந்துவரும் தென் வியட்நாம் மன்னர் பாவோ—டாய், தம்மை வந்து சந்திக்குமாறு பிரதமர் தியமுக்கு மேலும் அழைப்பு விடுத்துள்ளாராம்.

அவரது அழைப்புத் தந்தியில், மன்னர், உள்நாட்டுப் போரை தவிர்க்கவும், பிரதமர் தலைமையில் எல்லாவகைப்பட்ட மக்களுக்கும் பிரதிநிதித்துவம் வாய்ந்த அமைச்சரவை ஒன்றை அமைக்கவும் பரிகாரம் கண்டுபிடிக்கவே தாம் இந்த நெருக்கடிகளில் தலையிடுவதாகவும், இதிலிருந்து பிரதமர் மீது தமக்குஎவ்விதப்பகை உணர்ச்சியும் கிடையாது என்பது தெளிவாகப் புலனாகும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார் மன்னர் பாவோ—டாய்.

(ஆனால், மன்னர் பாவோ-டாயை 'டிஸ்மிஸ்' செய்து விட்டதாக புதிய புரட்சிச் சபை அறிவித்திருப்பது இங்கு மீண்டும் குறிப்பிடத்தக்கது.)

களம் புகுவோம்-உரிமை பெறுவோம்

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

கூட்டம் நடைபெற்ற இடம் மின்சார விளக்குகளால் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மைதானத்தின் முகப்பு வாயில் நன்கு அலங்கரிக்கப்பட்டு, 'பொதுச் செயலாளர் அவர்களே, வருக!' என்று வரவேற்றபடி இருந்தது.

மேடை நன்முறையில் அமைக்கப்பட்டிருந்ததுடன், மேடையில் தொழிலாளர் உயர்வு பற்றிய ஓவியங்கள் பல வைக்கப்பட்டிருந்தன.

தோழர்கள் பி. ஜீ. இராதாமணாளன், அன்பானந்தன் ஆகியோரின் பாடல்களுடன் கூட்டம் ஆரம்பமாயிற்று.

தோழர் நீலநாராயணன் முன்மொழிய தோழர் கா. சே. அன்பரசு வழிமொழிய சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இளம்பரிதி கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

அவர், தமது தலைமையுரையில், தொழிலாளர்களின் மேன்மைக்கு தி மு. கழகம் வகுத்துள்ள திட்டங்கள் என்னவென்பதை எடுத்துக் கூறினார்.

அடுத்துப் பேசிய நடிகமணி தோழர் டி. வி. நாராயணசாமி பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியனைப் பாராட்டிப் பேசினார்.

தி. மு. கழகத்தின் கொள்கைகளைப் பற்றிப் பேசுகையில், அவர், எத்தர்களும், பித்தர்களும் எத்துணை இடுக்கண்கள் விளைவித்த போதிலும் நாம் திராவிட நாட்டை அடைவோம் என்பதில் ஐயமில்லை என்று கூறினார்.

அடுத்துச் சொற்பொழிவாற்றிய புதுமை நடிகர் தோழர் எஸ். எஸ். இராசேந்திரன், 'மே தின விழாவினை தி மு. கழகம் கொண்டாடுவது ஏன்?' என்பதை விளக்கிப் பேசினார்.

"முதலாளித்துவத்தை ஒழிக்க முறையான திட்டங்களை வகுத்துக் காரியமாற்றும் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான்; தொழிலாளர் துயர் துடைக்கப்பட வேண்டுமானால் திராவிட நாடு பிரிவினையே சிறந்ததோர் மார்க்கமாகும்," என்று அவர் தமது சொற்பொழிவில் குறிப்பிட்டார்.

அடுத்து, பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு சென்னை மாவட்ட தி. மு க. வின் சார்பில் வாழ்த்து இதழ் ஒன்று வாசித்தளிக்கப்பட்டது.

பொதுச் செயலாளர் பேச எழுந்ததும், அவருக்கு சென்னை மாவட்ட தி. மு. கழகக் கிளைகள் சார்பில் வட்டவாரியாக கைத்தறித் துணிகளும், மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன; மற்றும் எழும்பூர் அறிவு வளர்ச்சி மன்றம், ஞான சௌந்திரபாண்டியன் படிப்பகம், ரிக்ஷா தொழிலாளர் சங்கம், பாண்டிச்சேரி தி. மு. கழகம், (நடராசன் மூலமாக) சௌகார் பேட்டை ஆர். எல். பிரதர்ஸ், திராவிடர் தையல் தொழிலாளர் கழகம், திராவிட மாணவர் கழகம், திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பகம், முத்தியாலுப் பேட்டை முத்தமிழ் மன்றம், மறுமலர்ச்சி மன்றம், அழகிரி நூல் நிலையம், இராயபுரம் இளைஞர் கழகம், வட சென்னை குறள் நெறிக் கழகம், மவுண்ட் ரோடு நடைபாதை வியாபாரிகள் சங்கம், சென்னை சர்க்கார் பஸ் தொழிலாளர் ஆகியோர் சார்பில் ஏராளமான கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டது.

பொதுச் செயலாளரின் மே தின விழாச் செய்தியைக் கேட்பதற்கு ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள், கடற்கரையில் கூடியிருந்தனர். அந்த மக்கள் கூட்டத்தின் நீண்ட கைதட்டலுக்கு இடையே எழுந்து பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அரியதோர் சொற்பெருக்காற்றினார்.

இலஞ்சம் வாங்கிய போலீஸ்காரர்

ரூ. 200 அபராதம்; 7 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார்.

பம்பாய் போலீசைச் சேர்ந்த விட்டல் எனும் பெயருடைய போலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர், இலஞ்சம் வாங்கிய குற்றம் ஒன்றிற்காக, விசேட நீதிபதியால் ரூ. 200 அபராதமும், 7 மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளதாகச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

சி. பி. சிற்றரசின் புதிய முகவரி

கடிதம் எழுதும் நண்பர்கள் கீழ்காணும் முகவரிக்கு எழுத வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்:—

சி. பி. சிற்றரசு,
31, தையப்ப முதலி தெரு,
மண்ணடி, சென்னை—1.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.